மனனம் செய்ய
இந்த வார வசனம்:

அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்.

(லூக்: 3:16)

தாம் குற்றமற்றவராகவே இருந்தபோதும், கீழ்ப்படிதலுள்ள ஊழியனாக, மனமாற்றம் பெறவந்த பாவிகளுள் ஒருவர் போல திருமுழுக்கு யோவானைத் தேடிவந்தார். இயேசுவின் பொதுப்பணி வாழ்வுக்குத் தொடக்கமாக தூய ஆவியானவர் அவர்மீது இறங்கி அவரை அருள்பொழிவு செய்தார்.

நம்முடைய திருமுழுக்கின் வழியாக, நாம் கிறிஸ்துவின் ஆன்மீக உடலின் உறுப்பினர்களாகிறோம்; மேலும் தூய தமதிரித்துவத்தின் நெருக்கமான உறவின் செயலாற்றலைப் பெறுகின்றோம். கடவுளின் குழந்தைகள் என்ற புதிய அடையாளத்தையும், திரித்துவ கடவுளின் வாழ்வுக்குள்ளும் ஈர்க்கப்படுகின்றோம். திருத்தந்தை 2 ஆம் ஜோன்போல் அவர்கள் தம்முடைய பொது நிலையினருக்கான அழைத்தல் மற்றும் தூதுரை என்னும் Christifideles Laici 12 சுற்றுமடலில் இவ்வாறு கூறுகிறார். திருமுழுக்கு என்பது ஒரு திராட்சைக்கொடியில் இணைந்துள்ள கிளைகளைப் போல கிறிஸ்துவுக்கும் அவரின் சீடர்களுக்கும் இடையே உள்ள ஆன்மீக ஒன்றிப்பு.

பவுலடிகளார் திருஅவையை துன்புறுத்தும் எண்ணத்தோடு, தமஸ்குவுக்கு செல்லும்வழியில் வானத்திலிருந்து வந்து சூழ்ந்த ஒளியால் தாக்கப்பட்டு. “சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்” என்னும் குரலைக் கேட்டார். இந்த வார்த்தையிலிருந்து இயேசு தம் உடலோடு திருஅவையோடு ஒன்றித்திருப்பதை உறுதிப்படுத்துகிறார்.

ஆயர் ரோபர்ட் பாரன் தம்முடைய மறையுரையில் இவ்வாறு கூறுகிறார். திருமுழுக்குப் பெற்ற நபராக, கிறிஸ்துவின் ஆன்மீக உடலின் உறுப்பினராக திருமுழுக்குப் பெற்ற அனைத்து மக்களோடும் இணைந்திருக்கின்றீர்கள். இந்தப் புனிதர்கள் அனைவரும் சகோதர சகோதரிகள். ஆனால் இப்போது அழுத்தமாக அறிந்துகொள்ளுங்கள். புனிதர்கள் மட்டுமல்ல; நல்லவர், கெட்டவர், அசிங்கமானவர்கள்., வேறுபட்டவர்கள் - ஆகிய அனைவரும் ஒரு உடலில் உள்ள உறுப்புகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதுபோல் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நம்மோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உடலின் ஒருபாகம் வலியால் துடிக்கும்போது, அது நம்மையும் காயப்படுத்த வேண்டும். அதனால் தான் உடல்சார்ந்த இரக்கச் செயல்கள் மற்றும் ஆன்மா சார்ந்த இரக்கச்செயல்கள் மிகவும் முக்கியமானவை. நமது திருமுழுக்கின் உட்பொருளை நாம் உணர்ந்தால், கிறிஸ்துவின் ஆன்மீக உடலை வலுப்படுத்துவது எவ்வளவு அவசியம் என்பதை நாம் அறிந்துகொள்வோம். நாம் தனித்திருப்பதில்லை, நம்மை தாங்குவதும் வலுப்படுத்துவதும் அருளடையாளங்களே.

கடவுள் நமக்குக் கொடுத்த கொடைகளைப் பற்றி சிந்திக்க இந்த நேரத்தை நாம் பயன்படுத்துவோம். இந்தக் கொடைகளைக் கொண்டு கிறிஸ்துவின் உடலை நாம் கட்டியெழுப்புகின்றோமா அல்லது அந்த உடலைச் சிதைக்கின்றோமா? குழப்பம் நிறைந்த இந்த உலகில், தமது உடலின் வழியாக கிறிஸ்து செயல்படவேண்டும். அதில் நாம் இணைந்துள்ளோமா அல்லது வெளியே இருக்கிறோமா?

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 40: 1-5, 9-11;

திபா: 104: 1-4, 24-25, 27-30;

தீத்து: 2: 11-14, 2:4-7;

லூக்கா: 3: 15-16, 21-22.

INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

9 ஜனவரி 2021

Newbec
NEW WAY OF BEING CHURCH
ஆண்டவரின் திருமுழுக்கு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் வாரம்**

# கிறிஸ்துவின் ஆன்மீக உடலை வலுப்படுத்துதல்

திருஅவை இன்று ஆண்டவரின் திருமுழுக்கைக் கொண்டாடுகிறது. விண்ணகத் தந்தை இயேசுவை தம்முடைய தெய்வீகமகன் என்னும் உரிமையை உறுதிப்படுத்தும்போது, தூய ஆவியானவர் புறாவடிவில் அவர்மீது இறங்கினார். இந்த நிகழ்வை நாம் காணும்போது எசாயா இறைவாக்கினர் அதிகாரம் 42 இல் முன்னரே இறைவாக்குரைத்தது உண்மையாகவே நடந்தேறியது. தந்தையாம் கடவுள் நம்மை மீட்க, தம் மகனை அனுப்பினார்.

